திருமறைக்கலாமன்றத்தின்


# முற்றம்


செய்தி இதழ்

ஆண்டு - 05 | வைகாசி 2006 | இதழ் - 02











# சமாதானத்திற்கு சந்தர்ப்பம் அளிப்போமாக!

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பண்டத்தரிப்பை நோக்கிச் செல்லும் பாவலர் துரையப்பாபிள்ளை வீதியின் இடது பக்கத்தில் ஒரு பெரிய கட்டளை முகாம் மற்றும் சித்திரவதை முகாம். அடுத்து அம்பனைச் சந்தியில் ஒரு மினி முகாம். இரண்டு முகாம்களுக்கிடையே நான்கு காவலரண்கள். ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 500 மீற்றர் இடைவெளிக்குள் இருந்தது. அப்படியே பண்டத்தரிப்பு சந்தி வரைக்கும் நீண்டு கொண்டே போகின்றன! காவலரண்கள் மட்டுமல்ல பொதுமக்கள் மீதான கெடுபிடிகளும் துன்புறுத்தல்களும் தான்.

கட்டளை முகாமில் இருந்து மினி முகாமிற்கு ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் இராணுவ அணியினர் மாறிச்செல்வர். வாகனங்கள் மட்டும் பிரதான வீதியால் செல்ல இராணுவ அணியினர் வீதிக்கு வடக்கு, தெற்குப் பக்கமாக உள்ள கிராமத்தினூடாகச் செல்வர். போக்குவரத்துக்கு வசதியாக வேலிகளை அகற்றியும் மதில்களை இடித்தும் பாதைகளை அமைத்துள்ளார்கள். காலையில் தெற்குப் பக்கமாகச் சென்றால் மாலையில் வடக்குப் பக்கமாக வருவர். இவர்களின் வருகையை ஊர் நாய்கள் காட்டிக்கொடுத்து விடும். நாய்கள் பலமாகக் குரைக்கும், ஊளையிடும். அந்த நேரத்தில் வீடுகளில் இருப்போர் அடையாள அட்டையுடன் வீட்டு முற்றத்தில் நிற்பார்கள். காரணம் திடீர் சோதனை என்ற பெயரில் வீட்டுக்குள் இருக்கும் பெண்களிடமும், ஆண்களிடமும் சேட்டைகளில் ஈடுபடுவர். இதனால் எல்லோரும் முற்றத்தில் நிற்பது வழமையாகிவிட்டது.

பகீரதன் எனது பாடசாலை நண்பன். விடுதியில் தங்கியிருந்து என்னோடு ஒன்றாகவே கல்வி கற்று வந்தான். அவனது சொந்த இடம் மாங்குளம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பப்பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த அவனது தந்தையை எந்தவித காரணமுமின்றி சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். தாய் இரண்டு சகோதரிகள் மற்றும் தாய்மாமன் உதவியுடன் வாழ்ந்துவந்தவன். தனது ஆரம்பக் கல்வியை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கற்றான். படிப்பிலே சிறந்த கெட்டிக்காரனாகவும் இருந்தான். குடும்பத்தில் ஒரே ஒரு ஆண்பிள்ளை என்ற காரணத்தினால் அவனது மேற்படிப்பை தன் தாய்மாமன் உதவியுடன் எமது பாடசாலையில் தொடர்ந்தான்.

நான் ஏழாம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது பகீரதன் மற்றும் அவனது மாமா சகிதம் வந்த எங்கள் வகுப்பாசிரியர் மாணவர்கள் எலலோருக்கும் அறிமுகப்படுத்திய பின் அவனை என்னருகில் அமரச்செய்தார். சிறிய புன்சிரிப்புடன் என்அருகே அமர்ந்தவன், எங்கள் வகுப்பு பாட நிலமைகள், ஊர் நிலமைகள் பற்றி என்னிடம் கேட்டறிந்தான். இன்ரவல் நேரங்களில் இருவரும் ஒனறாகவே திரிவோம். அந்த நேரத்தில் நானும் அவனிடம் நிறைய விடயங்களைத் தெரிந்து கொண்டேன். அழகும், வளமும், செழிப்பும் மிக்க வன்னி மண்ணின் பெருமைதனை தெரிந்துகொண்டேன். நாளடைவில் இறுக்கமான நல்ல நண்பர்களானோம். பாடசலை விடுமுறை நாட்களில் எங்கள் வீட்டுக் அருகாமையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் மற்ற நண்பர்களோடு இணைந்து கிரிக்கெட், உதைபந்தாட்டம், கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வோம்.

ஒரு நாள் பாடசாலை மதியஉணவு இடைவேளையின் போது பகீரதன் தன்னைப்பார்க்க வந்த தன்தாயிடம் என்னைக் கூட்டிச்சென்று அறிமுகப்படுத்தி எமது ஆழமான நட்பை மகிழ்வோடு பகிர்ந்துகொண்டான். அந்தத் தாய் அன்போடும், பாசத்தோடும் என்னோடு உரையாடியவிதம் இன்னும் என் மனக்கண் முன்னால், தன் மகனுக்காக ஆசையாய் கொண்டுவந்த பனாட்டு, எள்ளுருண்டை, முறுக்கு போன்றவற்றை எனக்கும் உண்ணத்தந்து சாதாரண நண்பனாய் இருந்த பகீரதனை என் குடும்ப நண்பனைப்போல் ஆக்கி வைத்தாள்.1987ம் ஆண்டு இறுதிப்பகுதி சனிக்கிழமை காலை எட்டு மணி திடீரென இந்திய இராணுவத்தினரின் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஜீப் வண்டிகள் எமது கிராமத்துள் நுழைந்தன. சோதனை நடத்தப் போவதாகவும், பொது மக்கள் எல்லோரையும் தங்கள் வீடுகளுக்குள் இருக்குமாறும் வெளியில் நடமாட வேண்டாமென அரைகுறைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிவித்தார்கள். எங்கள் கிராமத்தில் சோதனை நடவடிக்கைகள் அடிக்கடி இடம்பெறுவது வழமை. ஆனால் மாறாக ஒலி பெருக்கியில் அறிவிப்புச் செய்தமையினால் ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போன்ற உணர்வு. அறிவிப்புச் செய்து அரைமணி நேரத்திற்குள் டிரக் வண்டிகள் கவசவாகனங்கள் சகிதம் பல படையினர் வந்து குவிந்தனர். நாய்கள் குரைக்கும் சத்தம், அயல் வீடுகளில் சிறு குழந்தைகள் அழும் சத்தம், தமிழ், இந்தி, ஆங்கில மொழிகளில் வோக்கி டோக்கி சத்தம் ஒன்றின் பின் ஒன்றாக வந்துகொண்டிருந்தன.

எங்கள் வீடு பிரதான வீதியில் இருந்து ஊருக்குள் நுழையும் குறுக்கு வீதியின் பெரிய ஒழுங்கையை ஒட்டி சற்று மேடான இடத்தில் இருந்த படியால் வீதியால் சென்று வருபவர்களை இலகுவாக பார்க்கக் கூடியதாக இருக்கும். இப்பொழுது எங்கள் வீட்டுக் கேற்றைத் திறந்து நான்கு படையினர் எங்கள் வீட்டுக்குள் நுழைகின்றனர். இருவர் கையில் துப்பாக்கிகள். ஒருவர் கையில் பிக்கான் மற்றவர் கையில் மண்வெட்டி! அம்மா, அக்கா, அண்ணா, தங்கை மற்றும் நானும் வழமைபோலவே

அடையாள அட்டையுடன் முற்றத்தில் நிற்கின்றோம். எங்கள் நாய் ரொமி முதல் வந்தவனின் அருகாமையில் சென்றுபார்த்துக்கொண்டிருக்க அடுத்தவன், வீட்டுக்குள் ஒவ்வொரு அறை அறையாகச் சோதனை செய்தான். ஏனைய இருவரும் வீட்டிற்குப் பின்னால் இருந்த குப்பைக் குவியலை கிளறிக் குரைத்துக்கொண்டிருந்தது. அவனோ தன் கையில் இருந்த துப்பாக்கியின் அடிப்பிடியால் ரொமி யின் முகத்தில் ஓங்கி குத்தினான். அது வலிதாங்கமுடியாமல் ஊளையிட்டுக்கொண்டு இரத்தினசிங்கம் அண்ணையின் வளவுப் பக்கமாக ஓடியது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் அன்புத் தங்கை அம்மாவின் கால்களை கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

வந்த நால்வரில் முதலாமவன் எங்கள் அடையானஅட்டையை வாங்கிப் பார்த்துக்கொண்டிருக்க அடுத்தவன், வீட்டுக்குள் ஒவ்வொரு அறை அறையாகச் சோதனை செய்தான். ஏனைய இருவரும் வீட்டிற்குப் பின்னால் இருந்த குப்பைக் குவியலை கிளறிக் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட இருபது நிமிடங்களுக்கு மேல் கிளறியதில் ஒன்றும் கிடைக்காததினால் அடையாள அட்டைகளைத தந்துவிட்டு பெரியம்மா வீட்டுக் குப்பைகளை கிளற போய்விட்டார்கள். கிராமத்தை விட்டு இராணுவத்தினர் முழுமையாக வெளியேறும் வரை நாங்கள் முற்றத்திலேயே நின்றோம்.

காலை எட்டு மணிக்கு ஆரம்பித்த தேடுதல் மதியம் பன்னிரண்டு மணியாகியும் முடிவடையவில்லை. ஒரு ஜீப் வண்டியும் ஐந்து இராணுவத்தினரும் எங்கள் ஒழுங்கையில் நின்றனர். சாறம், சேட் அணிந்த ஒருவர் சைக்கிளை உருட்டிக்கொண்டு வருகிறார். இராணுவத்தினர் அவரை நிறுத்தி கைகளை உயர்த்துமாறு கூறி உடம்பு, வைத்திருந்த பெட்டி ஆகியவற்றையும், அடையாள அட்டையையும் சோதனை செய்து பார்த்துவிட்டு அவரை போகுமாறு உத்தரவிடுகின்றனர். அவரும் சைக்கிளை உருட்டிக்கொண்டு எங்கள் வீட்டைத் தாண்டிச் செல்கின்றார்.

இப்பொழுது ஒரு நடுத்தர வயதுப்பெண் சேலையால் உடம்பை போர்த்தியபடி நடந்து வருவது தெரிந்தது. அந்தப் பெண்ணையும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி அடையாள அட்டையைப் பார்த்துவிட்டு கிட்டத்தட்ட பத்து நிமிடம் வரை உரையாடுகின்றனர். இப்பொழுது ஒரு இராணுவத்தினன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு தோட்டப்புறம் இருந்த பக்கமாகச் செல்ல, பின்னால் மேலும் இருவர் சென்றனர். சற்று நேரத்தில் ஐயோ! அம்மா காப்பாற்றுங்கோ! என்ற கதறல் ஒலி வந்து கொண்டிருந்தது. கதறல் வந்த திசையை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருந்த என் அண்ணாவை இழுத்து நிறுத்தின என் அம்மா எல்லாத் தெய்வங்களையும் திட்டித்தீர்த்து இரண்டு கைகளையும் தலையில் அடித்து அழுதுகொண்டிருந்தா! சில நிமிடங்களில் அந்தக் கதறல் ஒலி அடங்கியது. இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு முழுமையாக நகர்ந்தனர்.

இப்பொழுது அந்தப் பெண் தள்ளாடித் தள்ளாடி அழுதுகொண்டு வந்துகொண்டிருந்தாள். எங்கள் வீட்டுப் படலை திறந்து இருந்ததால் எங்களைக் கண்டதும் வீட்டுக்குள் வந்துகொண்டிருந்தாள். சேலை, சட்டைகள் கிழிந்திருந்தன! தலைமுடி எல்லாம் காய்ந்த இலைச்சருகுகள். வாயில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அம்மா ஓடிச்சென்று கையைப் பிடித்துக்கொண்டு வருகிறா! நான் அந்த முகத்தை பார்க்கிறேன். தெரியவில்லை. தெரியவில்லை ஊருக்கு புதுமுகமாக தெரிகிறது. இப்பொழுது எங்களுக்கு கிட்ட வந்ததும் மீண்டும் உற்றுப் பார்க்கிறேன். தெரியவில்லை. ஆனாலும் என்றோ ஒருநாள் பார்த்த முகமாக இருக்கிறது. மீண்டும், மீண்டும் உற்றுப் பார்க்கிறேன். என்னைப் பார்த்ததும் அந்தப் பெண் அழத்தொடங்குகிறாள். எனக்கு இப்பொழுது தலையெல்லாம் விறைத்து உலகமே இருண்டு கொண்டு வந்தது. அதிர்ச்சியால் என்ன சொல்வது, செய்வது என்றுதெரியாமல் சிலையாக நின்றேன். அம்மாவுக்கும், அக்காவிற்கும், அண்ணாவுக்கும், தங்கைக்கும் தெரியாத முகம் எனக்கு மட்டும் தெரிந்த முகம். அந்த முகம் வேறு யாருமல்ல என் உயிர் நண்பன் பகீரதனின் அம்மா! இராணுவத்தினரின் நடவடிக் கைகளால் தன் மகனை கூட்டிச்செல்ல வந்த தாய் தனக்கு ஏற்பட்ட நிலைமையினால் மகனைப் பார்க்காமலே அன்று வீடு திரும்பினாள்.

சமாதானத்திற்கு சந்தர்ப்பம் அளிப்போமாக! நான்கு ஆண்டுப் போரில் மாண்டதோ ஆயிரமாயிரம் உயிர்கள் யாருக்கென்ன பயன்? சமாதானத்திற்கு சந்தர்ப்பம் அளிப்போமாக! என்ற அறிவிப்பு மணிக்கொரு தடவை திரும்பத் திரும்ப இந்திய இராணுவத்தினரின் வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

- இரா.ஜெயக்குமார் -

(உண்மைச் சம்பவம்)

---

## கலை நிலா-2006

கடந்த 26.03.06 அன்று வான்மதி பிரெஞ்சு-தமிழ்- நட்புறவுக் கழகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கலைநிலா-2006 கலைக்கதம்பம், பாரீஸ் மக்ஸ்டொமி அரங்கிலே அரங்கம் நிறைந்த மக்கள் வெள்ளத்தின் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி திரு.ரமேஸ் சிவரூபன் ஆரம்பித்து வைக்க, வரவேற் புரையை இணைச்செயலாளர் பவன் கணபதிப்பிள்ளை ஆற்றினார். தொடர்ந்து புலம்பெயர் நாடுகளில் எதிர்காலச் சந்ததிகளின் வளர்ச் சியில் பெற்றோர்களின் பங்கு திருப்தியாக உள்ளதா? இல்லையா?

எனும் தலைப்பில் பட்டி மன்றம் இடம்பெற்றது. பட்டிமன்றத் திற்கு திரு.கோவை நந்தன் அவர்கள் தலைமை தாங்க வாதத்துக்கு ஆதரவாக கவிஞர் பாரதிதாசனும் தோழர் சுரேந்திரனும்ஈ வாதத்தை எதிர்த்து திரு.பவன் கணபதிப் பிள்ளையும் மெய்கண்டான் அரியரெட்ணம் அவர்களும் வாதிட்டனர்.

தொடர்ந்து கலாலயம் கலைக்கல்லூரி அதிபர் பரத சூடாமணி திருமதி கௌசல்யா ஆனந்தராஜாவின் மாணவிகளால் புஸ்பாஞ்சலி நடனம் அரங்கேற் றப்பட்டது. அதனைத் தொடர்ந்து கலாலயம் கலைக்கல்லூரி ஆசி ரியை சங்கீதரத்னம் திருமதி தேவமனோகரி சுரேந்திரன் அவர் களின் மாணவர்களால் கர்நாடக இசை பாடப்பட்டது. தொடர்ந்து **R.C.New Boys and Girls** மற்றும் **Dreams Dances** வழங்கிய மேற்கத்தய நடனம் இடம் பெற்றது. நிகழ்ச்சியை மேலும் மெருகேற்ற ஐரோப்பாவின் முன்னணிப்பாடகர்கள் பங்கேற்ற ஈழநிலா இசைக்குழு வினரின் இன்னிசைக் கானங்கள் இடம்பெற்றது. அடுத்து திருமறைக் கலாமன்றம் தமது வழக்கமான சிறப்புடன் கதம்ப நிகழ்வு ஒன்றை திறம்பட வழங்கினர். இது ரசிகர் களின் பேராதரவைப் பெற்றது. திரு மனோ அவர்களின் நெறியாள்கை பாராட்டப்படத்தக்கதாக இருந்தது. நிகழ்ச்சியின் இடைவேளையின் போது வான்மதி நட்புறவுக் கழகத்தால் தொகுக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பை கலைஞர் ரகுநாதன் அவர்கள வெளியிட்டு வைக்க எழுத்தாளர் வண்ணைத் தெய்வம் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வான்மதியின் வளர்ச்சியும் எழுச்சியும் பற்றிய சிறப்புரையை திரு.கு.குணரூபன் அவர்கள் ஆற்றினார்கள். தொடர்ந்து கலாலயம் கல்லூரி மாணவிகளால் தில்லானா நடனம் அரங்கேற்றப்பட்டது. இவர்களின் நடனம் ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. தொடர்ந்த R.C.New Boys Girls மற்றும் Dreams Dances நவீன நடனம் மேடையேற்றப்பட்ட போது பார்வை யாளர்கள் பலத்த கரகோசம் செய்து வரவேற்றனர்.





பின்னர் கடினமான தமிழ் வரிகளை அழகுற மனனம் செய்து கவி இசைத்த ஐந்து வயது நிரம்பிய வானதி சிவரூபனும், ஈழநிலா இசைக்குழுவில் ஏமாற்றாதே ஏமாறாதே பாடலைப் பாடிய பத்து வயது கொ.கிரிசன் அவர்களும் மக்களின் பலத்த கரகோசத்தைப் பெற்று அவர்கள் மனங்களில் இடம்பிடித்தனர். அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் திரு.ரமேஸ் சிவரூபனின் மனவெளிகள் நாடகம் இருந்தது. இது எம் எல்லோரையம் கண்கலங்க வைத்ததுடன் தாயகத்தின் வீதிகளில் எம்மை பயணிக்க வைத்து அனைவராலும் பாராட்டப்பட்டது. அடுத்து மேடையேற்றப்பட்ட விதைநெல்லு நாடகம் கலைஞர்களின் மிகுந்த ஒத்துழைப்பைப் பெற்றிருப்பின் மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

நிகழ்ச்சியின் உச்சகட்டமாக நீண்ட காலமாக கலைப்பணி புரிந்த திரு.டேமியன் சூரி அவர்களையும் திரு.எஸ்.எஸ்.தில்லைச்சிவம் அவர்களையும் மாவீரர் லெப். சிவா ஞாபகார்த்தமாக, தோழர் கு.சுரேந்திரன் அவர்கள் அவரது குடும்ப உறுப்பினர்கள் சார்பில் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தார். இந்த இருவரும் கலைப்பணிபுரிந்து தமிழ் மக்கள் மனதிலே தனி இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினர்களாக திரு ஒலிவியே சிமன் அவர்களும் திருமதி வனேசா அவர்களும் கலந்துகொண்டு கலைஞர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். நிகழ்ச்சிகளை தமிழில் திரு.V.மோகனதாசனும், பிரெஞ்சில் திருமதி ரதினி கோபாலசிங்கமும் சிறப்பாக தொகுத்து வழங்கினர். அரங்கத்தை கண்கவர் முறையில் திரு.சீலன் அவர்களும் திரு.பாஸ்கரன் அவர்களும் வடிவமைத்திருந்தனர். வான்மதியின் பொருளாளர் அன்ரனி ஜெராட் தேவநாயகம் (நிசாந்தன்) அவர்கள் நிகழ்ச்சிகளை நேர்த்தியாக ஒழுங்கமைத்திருந்தார். இறுதியாக இணைச்செயலாளர் தோழர் சுரேந்திரன் அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. இந் நிகழ்ச்சியின் ஊடாக வான்மதி மக்களின் மனங்களை வென்று பாராட்டுப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



*-ச.மைக்கல் கொலின்ஸ்-*

## அது ஒரு கனாக் காலம்

பனையின் கீழ்
கண்ட சுகம்
பனியின் மேல்
தொலைந்து போய்
தனிமையின்
கொடுமையில்
தலையணை
நனைகிறது.
தினமும்
மேலாடை இன்றி
இடையில்
நூலாடையுடன்
நீராடும்
பெண்கள்
ஏராளம் இங்கு
கண்டாலும்
பாவாடையில்
வேணி குளிக்க
வேலிமேல்
எட்டி
பார்த்த சுகம்
கோடி பெறும்.
குளிரூட்டிய
அறை
குடிக்கவோ
மதுரசம்
பலவகை
இருந்தும்
கூவில்
கள்ளு
இன்றும்
நாவில்
இனிக்கிறது.
சந்தி
பொந்தெல்லாம்
இங்கு
முத்தங்கள்
சத்தமின்றி
கிடைத்தாலும்
பதுங்கு
குழிக்குள்
பவளத்திற்கு
இட்ட
முத்தம்
எத்திக்கும்
தித்திக்கும்
தீன் சுவைப்
பண்டங்கள்
திகட்டாத
கனிவகைகள்
தேடாமலே
கிடைக்கும்
இங்கு.
அம்மா
தந்த
ஆடிக்கூழை
தேடிக்
களைத்துவிட்டேன்.
இலண்டன்
பாலமதில்
என் கால்
பதியும்
நேரமதில்
நாவற்குளி
பாலம் வரும்
நினைவில்
நான் பட்ட
கோலம் வரும்
நெஞ்சம்
குமுறும்
இக்கரையில்
நின்றாலும்
அக்கரையில்
எரியும்
என்தேசம்
தெரியும்
சோகம்
கவ்வும்
நாடி
நரம்பெல்லாம்
குளிர்
தேடிவரும்
தனிமை
கொல்லும்
போர்வைக்குள்
என் கற்பும்
போராடும்
மீண்டும்
பனையடியில்
அம்மி
மிதிக்க
அவளோடு
நான். . . . .

~அல்வி~

## அவள் யோசிக்கின்றாள்!

யோசிக்கவேண்டியிருக்கின்றது!
பேசுமுன்
யோசிக்கவேண்டியிருக்கின்றது!
கணவருடன் பேசுமுன்
யோசிக்கவேண்டியிருக்கின்றது!
கணவருடன் பேசும்போதுதான்
அதிகம்
யோசிக்கவேண்டியிருக்கின்றது!

நான் பேசுவது
அவரைக் கோபப்படுத்திவிடுமோ?
யோசிக்கவேண்டியிருக்கின்றது!

எனக்கு கோபம் வரும்!
இருந்தாலும் நான்
யாருடனும் கோபிப்பதில்லை!

சில சமயங்களில்
குமுறிச் சிதறும் எரிமலையாய்
வெடிக்க நினைக்கின்றேன்
இருந்தாலும் யோசிக்கின்றேன்!

எனது கோபம்!
எனது தீக்கணைகள்!
எனது சகோதரிகளை
எரித்துவிட்டால்?
யோசித்தேன்!

அடக்கமில்லாதவள்!
இவள் குடும்பமும் அப்படித்தான்
இப்படியான பழிச்சொற்களை
என் சகோதரிகளுக்கும்
சுமத்திவிட்டால்?

இப்பொழுது
எனது கோபங்கள் அடங்கி
எனக்கு பயம் வந்துவிட்டது!
மனதிற்குள் வெம்பி விம்முகின்றேன்!

குளிக்கும்போதுதான்
மனம்விட்டு அழுகின்றேன்!
அப்பொழுதுதான்
என் கண்ணீர் எவருக்கும்
தெரிவதில்லை.

-வண்ணை தெய்வம்-

# ஓவியக் கலைஞர் ஆர்ட்டிஸ்ற் மணியம்

கடந்த 50 வருட காலப் பதிவுட்குள், பல கலைகளில் திறமைமிக்க பல கலைஞர்கள், நம் மத்தியில் வாழ்ந்து மடிந்துவிட்டார்கள். கூத்துக் கலைஞர், நாடகக் கலைஞர், நடனக் கலைஞர், ஓவியக் கலைஞர், சிற்பக் கலைஞர், கட்டிடக் கலைஞர், தவில் வித்துவான்கள், நாதஸ்வரக் கலைஞர் என்று பலரை நாம் நினைவு கூரக்கூடிய அளவிற்கு, தமது கலைச்சாதனையை நமது மண்ணில் பதிய வைத்துச் சென்றுள்ளார்கள். இவர்களையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கின்றோமா என்பது . . . . . .. ? இந்த வரிசையில் பார்க்கும் போது சமீபத்தில் தனது 82வது வயதில் காலமடைந்த ஆர்ட்டிஸ்ற் மணி **அண்ணன் அவர்களை என் மனக்கண் முன்** எண்ணிப்பார்க்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய சினிமாப் படங்கள் தொடர்ந்து 100, 150 நாட்கள் ஓடியதை நாம் பார்த்திருக்கிறோம். திரைப்படங்கள் தரம், தரமில்லை என்பது ஒரு புறமிருக்க திரு ஆர்ட்டிஸ் மணியம் அவர்களின் ஓவியங்களைப் பார்ப்பதற்காகவே தியேட்டர் முன் கூடிய கூட்டம் ஆயிரக் கணக்கெனலாம். ஆம் யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய சினிமாப் படங்கள் தொடர்ந்து பலநாட்கள் ஓடியதற்கு கலைஞர் ஆர்ட்டிஸ்ற் மணியம் அவர்களின் ஓவியங்களும் காரணம் என்பதை எவருமே மறுக்க மறைக்க முடியாது.

யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களில் இருந்து பெரிய கடைக்குப் பொருட்கள் வாங்கவரும் குடும்பத்தினர் பலர் பட மாளிகைக்கு முன்பாக நின்று, அங்கே வரையப்பட்டிருக்கும் சினிமா நடிகர்களின் உருவங்களைப் பல மணிநேரம் நின்று பார்த்துவிட்டு பின்பு தியேட்டருக்குள் போய் ரிக்கற் வாங்கி படம் பார்த்த அனேகரை நான் என் கண்ணால் பார்த்துள்ளேன். நானே சில படங்களை அப்படித்தான் பார்த்ததுண்டு.அந்த அளவிற்கு கலைஞர் ஆர்ட்டிஸ்ற் மணியின் படங்கள் தத்துரூபமாக இருக்கும். யாழ்ப்பாணம் ராணித் தியேட்டரில் கட்டப்பட்டிருந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த *சவாலே சமாளி* என்ற திரைப்படத்தின் கட்டவுட் படங்கள் மணியண்ணனின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு உயிரேவியங்களாக காட்சியளித்திருந்தது. அக்காட்சி இன்றும் என் மனக்கண் முன் நிழல்படம் போல் தெரிகிறது.

இப்படியான ஒரு திறமைமிக்க கலைஞர் திரு மணியம் அவர்கட்கு, ஒரு மனக்குறையிருந்தது. அவரிடம் பல இளம் கலைஞர்கள் ஓவியம் வரைவதைக் கற்றிருந்தபோதும், தனது ஆத்ம திருப்திக்கமைய ஒரு கலைஞரையும் உருவாக்க முடியவில்லையே என்ற ஆதங்கம், அவர் மனதிற்குள் இருந்தது என்பதை அவரது நேர்காணல் ஒன்றின் மூலம் நான் அறிந்தேன். எல்லாக் கலைஞருக்கும் ஏதோ ஒரு மனக்குறை இருக்கும் என்பதற்கு கலைஞர் ஆர்ட்டிஸ்ற் மணியம் அவர்களும் விதிவிலக்கல்ல என்பது நிருபணமாகின்றது. 1973ம் ஆண்டு திருமறைக்கலாமன்றம் *களங்கம்* என்ற நாடகத்தை மேடையேற்றுவதற்காக அருட் தந்தை மரியசேவியர் அடிகளாருடன் இந்தியா சென்றிருந்தது. அந்தக் குழுவில் நானும் ஒருவனாக அங்கு சென்றிருந்தேன். அந்த நேரத்தில் பிரபல நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் நடித்த *உலகம் சுற்றும் வாலிபன்* திரைப்படம் அங்கே வெளியிட்டிருந்தார்கள். அந்தப் படத்தைப் பார்ப்பதற்காக நானும் பிரபல நடிகர் ஜெனம் பிரான்சிஸ் மற்றும் கலைஞர்களும் தியேட்டருக்கு சென்றிருந்தோம். அங்கே தியேட்டர் முன்பாக ஒரு பனை மர உயர அளவில் எம்.ஜி.ஆர். அவர்களின் உருவப்படம் கட்டவுட்டாக வரையப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. திரு.ஜெனம் பிரான்சிஸ் அண்ணனும் நானும் அந்த உருவத்தை கூர்ந்து பார்த்துவிட்டு எங்கட மணியண்ணனிட்ட பிச்சை வாங்கவேணும் இந்தப் படத்தைக் கீறியவன் என்று எமக்குள் கதைத்துக்கொண்டோம். ஆர்ட்டிஸ்ற் மணி அவர்களின் திறமைக்கு இந்த உதாரணம் ஒன்றே போதும் என்று எண்ணுகின்றேன்.

திரு மணி அவர்களுக்கும் எனதுதந்தை திரு.சாமுவேல் பெஞ்சமின் அவர்கட்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனது தந்தையும் ஓவியங்கள் வரைவார். அவர் தனது மனதில் சில காட்சிகளை நினைவில் வைத்து அதை வரைவது அவரது ஓவியம். மணி அண்ணன் உருவங்களைப் பார்த்து அந்த உருவங்களை அப்படியே உயிராக வரைவார். இருவரும் ஓவியர்கள் என்பதால் மணியண்ணன் அடிக்கடி என் ஐயாவை எங்கள் வீட்டில் வந்து சந்தித்துப் போவார். மணி அண்ணன் மறைந்தாலும் அந்த நாள் நினைவுகள் என் மனதில் நிழலாய் நிற்கிறது.

எமது மண்ணில் கலை வளர்த்த நம் கலைஞர்களை எம் மனதில் நிலை நிறுத்திக் கொள்வோம். அந்த வகையில் எம் மண்ணில் ஓவியத்தில் சாதனை படைத்த ஆர்ட்டிஸ்ற் மணியன் அவர்களையும் எம் மனதில் நிறுத்திக் கொள்வோம். *முற்றம்* பத்திரிகை சார்பிலும், வாசகர்கள் சார்பிலும் அவர் ஆன்மா சாந்தி அடைய இறைஞ்சுகிறோம்.

பெஞ்சமின் இம்மானுவல்.

# விடுதலை

விடுதலை என்றால் என்ன?

விடுதலை என்ற பதத்துக்கு இரண்டு வகையாக வரைவிலக்கணம் கூறலாம்.

1. லௌகீக விடுதலை (உலக விடுதலை-புறவிடுதலை)
2. ஆன்மீக விடுதலை (உளவிடுதலை)

மனிதன் பிறப்பிலிருந்தே அறிந்தோ, அறியாமலோ விடுதலைக்காக போராடிவந்தான், வருகிறான் என்று வரலாறு கூறுகின்றது. இந்த விடுதலையானது மேற்கூறிய இரண்டு பதங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது என்பது உண்மையே.

இலௌகீக(உலகியல்) விடுதலையானது இன்று மிகவும் உச்ச கட்டத்தை அடைந்துள்ளதென்று தொடர்புசாதனங்கள் போட்டி போட்டு பறைசாற்றுகின்றன. இவ் விடுதலையை இனவிடுதலை, மொழிவிடுதலை, அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, மண்விடுதலை என்று பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவ்விடுதலை என்ற உணர்வு இன்று பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் குடிக்கின்றதாக, அங்கவீனப் படுத்துகின்றதாக, பல பொருளாதார அழிவுகளை ஏற்படுத்துகின்றதாக அறிகின்றோம், கேட்கின்றோம், பார்க்கின்றோம். இந்த விடுதலையைப் பெற்றவர்கள் மீண்டும் தங்களுக்குள்ளே விடுதலைப் போராட்டம் நடத்துவதையும் நாம் காண்கின்றோம். இவ்விடுதலை என்ற கருவை வைத்துக்கொண்டு வல்லரசு நாடுகளும், வளர்ச்சியடைந்த நாடுகளும் கோடிக்கணக்கான பணத்தை சுருட்டுவதற்காக உலகத்தை அழிக்கின்ற பல நாசகார ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றன.

எந்த விடுதலைக்காக போராடினார்களோ அவர்கள் மீண்டும் தங்களுக்கிடையே விடுதலைப் போரை ஏற்படுத்தி தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டு வருகின்றார்கள். ஆகவேதான் இந்த இலௌகீக விடுதலையானது, நிரந்தரமானதாகவோ, யதார்த்தமானதாகவோ இல்லை என்பது உலகறிந்த உண்மை. எனவே இலௌகீக விடுதலைக்கு முன்னர் மனிதன் தன்னைத் தான் விடுவித்துக் கொள்ளவில்லை என்றால் விடுதலை என்பது அர்த்தமற்ற தொன்றாகிவிடும்.

அதாவது தன்னைத்தான் விடுவித்துக்கொள்ளுதல் என்பது, உளவிடுதலை அல்லது ஆன்மீகவிடுதலை என்று கூறலாம். ஒருவன் தன்னைத்தான் எப்படி அறியமுடியும். தன்னைத் தான் எப்படி அன்புசெய்ய முடியும். தன்னைத் தான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை விளங்கிக் கொள்வதில் பலருக்குக்கு சிக்கல் இருக்கலாம். எப்படியென்றால் தன்னைத்தான் அன்பு செய்யாதவன், தன்னைத் தான் நம்பாதவன், தன்னைத்தான் ஏற்றுக்கொள்ளாதவன் மற்றவனை (அயலானை) அன்பு செய்யவோ, நம்பவோ, ஏற்றுக்கொள்ளவோ மாட்டான், முடியாது. ஆகவே முதலில் தன்னைத்தான் விடுவித்துக் கொள்ளவேண்டும். இங்கே தான் விடுதலையின் உயிர் நாடியே ஆரம்பமாகின்றது.

இவ்வாறு தன்னைத்தான் விடுவித்துக் கொண்டவர்கள் உலகில் பலர் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள். அவர்கள் காலத்தால் அழியாத உத்தமர்கள். மனிதருள் மனிதனாய் வாழ்ந்த மாணிக்கங்கள். இந்த வரிசையிலே உலகிலே வாழ்ந்த பல புனிதர்களை அடையாளம் காணலாம்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே வாழ்ந்த அண்ணல் காந்தி கூட முதலில் தன்னைத்தான் விடுவித்துக்கொண்டதினாலே மக்களையும், நாட்டையும் விடுதலையாக்க பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்துக்கே சவாலாக விளங்கி விடுதலையையும் வாங்கிக்கொடுத்தார். ஆனாலும் தம்மைத்தாமே விடுவித்துக்கொள்ளாமல் இந்த லௌகீக விடுதலைக்காக போராடியவர்கள் பலர் விடுதலையை பெறமுடியாமலே போனார்கள்.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிறந்த கிறிஸ்து முழுமையாக தன்னை விடுவித்துக்கொண்டதினாலேயே அவர் மரணத்திலும் வெற்றிகண்டார். ஆம்! இந்தக் கிறிஸ்து எப்படி தன்னை விடுவித்துக்கொண்டார் என்று சற்று ஆராய்ந்து பார்த்தால் தன்னைத்தான் முழுமையாக நேசித்தார், தன்னையே ஏற்றுக்கொண்டார், அதனால் தனது பெற்றோரை நேசித்தார், அவர்களை ஏற்றுக்கொண்டார். அவர் தனது பணியை மேற்கொள்ள சீடர்களை தெரிவுசெய்தார். தன்னை எப்படி அன்பு செய்தாரோ அப்படியே தனது சீடர்களை அன்பு செய்தார். அவர்களது கால்களைக் கழுவினார். தன்னைத் தாழ்த்தி தான் சொல்வது போல் வாழ்ந்து காட்டினார். அதனால் அவர் அமைத்த திருச்சபையானது இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி ஆன்மீகப்பணியை அளித்துவருகின்றது.

கிறிஸ்து தனது பணியை மேற்கொள்ள முன் தன்னை முழுமையாக அப்பணிக்கு ஆயத்தப்படுத்த நோன்பை மேற்கொண்டார் என்று நற்செய்தி கூறுகின்றது. நோன்பு என்பது தன்னை முழுமையாக மறந்து (உணவு, ஊன், உறக்கம் இன்றி) தன்னை பக்குவப்படுத்தி, தன்னை இறைவனோடு ஒன்றிப்பதாகும். அதன்மூலம் கிறிஸ்து தனக்கென எதையும் தேடவும் இல்லை, வைக்கவுமில்லை. தம்மை வெறுமையாக்கினார். அதனால் தான் மக்கள் அவரை பின்தொடர்ந்தனர். அவர் அவர்களை ஆன்மீக விடுதலையை நோக்கி அழைத்துச் சென்றார். அந்த விடுதலை இவ்வுலகில் அல்ல, மறுவுலகில் மகிழ்ச்சியான நிரந்தரமான வாழ்வை அளிக்கும் எனக் கூறினார். அதனால் தான் இவ்வுலகம் முழுவதையுயம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் உன் ஆத்துமாவை இழந்துபோனால் அதனால் என்ன பயன் என்று அழுத்தமாக கூறினார். சாத்தானின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட கிறிஸ்து எப்படி வெற்றி கண்டார் என்றால் தன்னைத் தானே விடுதலை ஆக்கிக் கொண்டதினால் தான். அவர் தன்னை நம்பினார், தன்னை அனுப்பியவரை நம்பினார். அதனால் தான் கடவுளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் மனிதன் உயிர்வாழ்கின்றான் என்றார்.

ஆகவே தான் நாமும் எம்மை முதலில் விடுதலையாக்கிக் கொள்ளவேண்டும். அப்போது தான் கணவன் மனைவிக்கிடையே அன்பும், உறவும், பாசமும், பரிவும், நம்பிக்கையும் ஏற்படும். அவைகள் கனிகளாகி குழந்தைச் செல்வங்கள் ஆகின்றனர். அவர்கள் குடும்பங்களாகி சமூகங்களாக மாறும்போது அவர்களுக்கிடையே இவ்விடுதலை இருக்கும். இவ்விடுதலை தான் உறவுகளை வளர்த்து மலரவைக்கும். அது வாசனையாகி மனதை மகிழவைக்கும்.

-வன்னி இசி-

## சிறுவர்களுக்கு உதவுவோம்



ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது கல்வியே. அதில் மிக முக்கியமானது சிறார்களின் ஆரம்பக்கல்வியே. அதுவும் சுனாமி, யுத்தம் போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களின் கல்வியும், பராமரிப்பும் அனைத்திலும் மிகமிக முக்கியமானதாகும். இந்த முக்கியத்துவத்தை மனதில் கொண்டு அநாதைச் சிறுவர்களின் வளர்ச்சியில் அக்கறைகாட்டும் நோக்கமாக தை 2005ல் 3 அங்கத்தவர்களுடன் பிரான்ஸ் St. Quen ல் ஆரம்பிக்கப்பட்டதே 'OHANA Sri Lanka" (இலங்கை குடும்பம்) என்ற அமைப்பாகும். இவ்வமைப்பு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்வி, உணவு, உடை, வதிவிடம் போன்ற அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய இலங்கை மட்டக்களப்பு St.Michael College உடன் இணைந்து இயங்கும் 'Butter fly peace garden Project" சங்கத்தின் ஊடாக தமது உதவிகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த தைமாதம் 28ம் திகதி 2006ல் பாரீசில் அநாதைச் சிறுவர்களுக்கு உதவும் முகமாக 'ஓகானா' வால் ஒரு கலைநிகழ்ச்சி நடாத்தப்பட்டு அதில் நிதி, உடைகள் என்பன சேகரிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பிரான்ஸ் திருமறைக்கலாமன்றமும் பங்குகொண்ட கூத்துக்கோலம், கடலோரக் கிராமம் ஆகிய கலைநிகழ்வுகளை அரங்கேற்றி சிறப்பித்ததுடன், இலங்கையில் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்களின் வளர்ச்சியில் தமது மன்றத்துக்குரிய அக்கறையை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.



தகவல்: - பூ.வாசுகன். -

## அம்மா !....

முலைகளின் காம்பு திருகி
குருதி உண்ட வலியில்
அவள் துடித்திருப்பாள் . . .

வரிகள் விழுந்த
வயிறுகளின் சுருக்கப்
பள்ளத்தில்
உறங்கியபோது
கால்கள் விறைத்திருக்கும் . . .

விடியல் எழுப்பி
பகலை விரட்டி
பொழுது சாய்க்கும் வரைக்கும்
ஓயாது சலிப்பின்றி
பம்பரமாய் சுழலுவாள் . . .

மௌனம் போர்த்திய
இரவின் கருமைக்குள்
பாம்பாய் நெளியும்
கொண்டவன் பசிக்கு
ஒப்பின்றியே
கால்கள் விரிப்பாள் . . .

மறுநாள் புலரும்
வழமைபோல் கரையும் . .

விருப்பு வெறுப்புக்களற்ற
அர்ப்பணிப்புக்காய்
அவள் பிறப்பை
அர்த்தப்படுத்தி
சமூகம் கர்வித்து நின்றபோதும்
தாய்மையின் உஸ்ணத்தில்
உலகத்தை
இயங்கப் பண்ணுவாள் . . .

மறுநாளும் புலரும்
வழமை போல் கரையும்

புலராத ஒரு பொழுதில்
அவள் கரைந்திருப்பாள் . . .

-எ.ஜோய்- 23.02.2006

# வேர்களும் முகங்களும்

- பேமியன் சூரி -

அன்று எமது இளைஞர் கலைக்கழகத்தின் மாதாந்த நிர்வாகசபைக்கூட்டம். நாம் வரவிருக்கும் காலப்பகுதிக்குரிய நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் வேலையில் முனைப்புடன் இருந்தோம். எமது கலையரங்கில் 3மாதங்களுக்கு பின் நடைபெறவுள்ள கலைநிகழ்வில் என்ன நிகழ்ச்சியை அரங்கேற்றுவோம் என்பது தான் விவாதம். எமது செயலாளர் திரு.கி.மா.நெல்சன் அவர்கள் நாட்டுக்கூத்து போடுவோம் என்ற பிரேரணையை முன்வைத்தார். எல்லார் முகங்களிலும் ஒரு ஆச்சரியக்குறி. எங்களுக்கு நாட்டுக்கூத்து பற்றி எதுவுமே தெரியாது. மேடையேற்றம் எப்படிச் சாத்தியமாகும்? என்பது பலரது வினா. நெல்சன் தனது பிரேரணையை விடுவதாகவில்லை. நாட்டுக்கூத்து என்றால் சாதரணமா? கூத்து கொப்பி இருக்குதா? பழக்கிறது யார்? பாடுவதற்கு ஆட்கள் இருக்கிறார்களா? இளைஞர் கலைக்கழகம் மேடையேற்றும் கலைநிகழ்வுகள் படிப்படியாக தரமானதாக வளர்ச்சிபெற்று மக்கள் மத்தியில் கழகத்தின் நாடகங்களுக்கு மதிப்பும் புகழும் இருந்து வந்த காலமாகையால் பலர் இதனை விரும்பவில்லை. நாட்டுக்கூத்தைப் போட்டு பேரைக்கெடுக்கப் போகின்றீர்கள் என வாதிட்டனர்.

அந்த நாட்களில் இளம் தலைமுறையினருக்கு கூத்துக்காரரை அறவே பிடிக்காது. நாடகமும், சினிமாவும் கோலோச்சிய காலமாகையால் கூத்துக்காரருக்கு அந்நாட்களில் மதிப்பே இல்லை. அவர்களைப் போகவிட்டு புறம் சிரிப்பார்கள். ஏன் நாங்களே சிரித்திருக்கின்றோம். எனது சிறுவயதில் எனக்கு விருப்பமுள்ள கலையாக கூத்து இருந்தது உண்மைதான். நானும் கூத்தில் பாடவேண்டும் என்று ஆசைப்பட்டதும் உண்மைதான். ஆனால் நான் வளர்ந்து இளம் பராயம் அடைந்தபோது எனக்கு அந்தக்கலை விருப்பமில்லாமல் போய்விட்டது.

கூத்து நடிகர்கள் பலரைப் பார்த்திருக்கின்றேன். அந்த நினைவை இப்பொழுது அசைபோட்டு பார்க்கின்றேன். அவர்கள் மத்தியில் குடிவெறி மேலோங்கி இருக்கும். கூத்துக்கு முன்னரும் சரி பின்னரும் சரி போதையில்தான் இருப்பார்கள். அதனால் எமது பாரம்பரிய முதிய சொத்தான அந்தக் கூத்துக்கலையை அவைக்கு அளிக்கை செய்யும் போது அதனது கதைக்கருவை கலைத்தும், சிதைத்தும், இணைந்த பங்களிப்பு இல்லாமல் அதன் அழகியல் கெட்டும், தரம் தாழ்த்தியும் வழங்கினார்கள். இதனால் பல கூத்துக்கள் தோல்வியடைந்ததுமில்லாமல் அதில் ஒரு வெறுப்பை பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தியுமிருந்தது. அது மாத்திரமல்ல கலைஞர்கள் மத்தியில் ஒற்றுமை இருக்கவில்லை. நான் சிறந்த பாட்டுக்காரன் நீ என்னைவிட தரம் குறைந்த பாட்டுக்காரன் என்ற பேதம், அதாவது உச்ச சாரீதக்காரன் குறைந்த சாரீதக்காரன் என்ற வேறுபாடு, அரசபாட் பாடுபவன் சேவகனுக்கு பாடுபவன் என்ற ஏற்றத் தாழ்வு, பாத்திரப் பொருத்தத்திற்கேற்ப உடைஉடுத்தாமல் அரசனும் பிச்சைக்காரனும் காஞ்சிபுரப் பட்டில் மினுமினுக்க உடுப்புடுத்தி வரவேண்டும் என்ற ஆசை, இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஆட்டத்துக்கும், பாட்டுக்கும், நடிப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து தமது ஆற்றலை வெளிப்படுத்தி பார்வையாளனைக் கவரவேண்டிய கலைஞனை அவனது பாதையில் இருந்து மாற்றி கூத்தை தரம் கெடச் செய்ததோடல்லாமல் பார்வையாளனுக்கு அந்தக் கலையின் மீது ஒரு வெறுப்புணர்வையை யே உண்டாக்கிவிட்டது. அத்தோடு கலைஞர்களுக்கு மத்தியில் போட்டி பொறாமைக்கு பஞ்சமே இல்லை.

எல்லோரையும் போல் எமக்கும் இதனால் வெறுப்பு ஏற்படுவது இயல்புதான். அதனால் அன்று கூட்டத்தில் காரசாரமான விவாதம். ஆனால் அன்று நெல்சனால் கூத்துக்கு சார்பாக வேறு ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. அதாவது இத்தகைய குறைபாடுகள் இல்லாமல் ஏன் தரமான கூத்தை எம்மால் மேடையேற்ற முடியாது? அதுவும் பெரியவர்கள், பெரிய பாட்டுக்காரர்கள் இல்லாமல் இளைஞர்கள் ஏன் கூத்து பழகிப் பாடக்கூடாது? என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இந்தக் கருத்துக்கு எதிராக எம்மால் பதில் கூறமுடியவில்லை. ஆனால் நாங்கள் இளைஞர்கள் அதுவும் கூத்துக்கு புதியவர்கள் ஆகையால் எமக்குள் எம்மையறியாது பயம் தொற்றிக்கொண்டது. இருந்தாலும் தைரியத்தை வளர்த்துக்கொண்டு அந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க உறுதி பூண்டோம். கூத்து 30நிமிடங்கள் மாத்திரம். அதனை எமது இளைஞர் கலைக்கழகத்திற்காக கவிஞர் கோளாறு ஜேம்ஸ் அவர்கள் உருவாக்கித் தந்தார். அதன் பெயர் நாடக வேதசாட்சி. அதனைப்பழக்குவதற்காக அண்ணாவி இளையப்பா அவர்களை ஒழுங்குசெய்தோம்.

அண்ணாவி இளையப்பா அவர்கள் பல கூத்துக்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். குடத்தனை, செம்பியன்பற்று, கட்டைக்காடு, தாழையடி போன்ற இடங்களில் அவரைத் தெரியாத கூத்துக்காரரே கிடையாது. அவ்விடங்களில் பலர் அவரால் உருவாக்கப்பட்டவர்கள். கூத்தில் காதல் காட்சிகளில் பாடி நடிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரை குருவாகக் கொண்டு அந்தக் கூத்தில் நானும் கதாநாயகனாக நடிக்க தேர்வானேன். எனது சிறுவயது ஆசை விரும்பிய நேரத்தில் நிறைவேறாது விருப்பமற்ற இந்த வேளை நிறைவேறும் என்று நான் அன்று எதிர்பார்க்கவில்லை. விரும்பிப்போனால் எதுவும் விலகிப்போகும். விலகிப்போனால் அது விரும்பிவரும் என்று முதியோர்கள் சொல்லும் வாக்கு எனக்கு அன்று பலித்தது. அன்றே நான் கூத்துக்கலைக்கு ஆரம்ப அடியெடுத்து வைத்தநாள். அன்று எனக்கு பொன்நாள். ஏனெனில் இன்று நான் எமது பாரம்பரிய சொத்தான கூத்துக்கலையை அளவுக்கதிகமாக நேசிக்கவும் அதன் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் உணரவும் அந்நாளே எனக்கு அடியெடுத்து வைத்தது.

ஞானக் கலையை தானே ஏற்றினார் -நாதன் யேசு
நல்வாழ்வினையே நாடிச் செல்லுவேன் - நாதன் யேசு

என்று இளையப்பா அண்ணாவியார் அடியெடுத்கொடுக்க நான் பாடிய இப்பாடல் இன்றும் என்னுள் ஒலித்துக்கொண்டே இருக்கினறது. இதை என்னனால் என்றும் மறக்க முடியாது. (தொடரும்)

# எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்

(நூல் அறிமுக விழா -பாரீஸ்) 19.02.06 ஒரு பார்வை

துன்பியற் படிமங்களால் தோய்ந்து கிடக்கும் புலம்பெயர் வாழ்வின் உணர்வடுக்களில் அதிர்வுகள் ஏற்படுத்தப்படும் போதெல்லாம் அது தன் இயங்கு திறனின் சமநிலையை இழக்கின்றது. அப்போதெல்லாம் தனக்கு இயல்பாக வரக்கூடிய ஏதாவதொரு கலைவடிவத்தினூடாக உணர்வுகள் சமநிலைக்கு வர முயல்கிறது. இவ்வாறாக பிரசவிக்கப்படுகின்ற படைப்புக்கள் படைப்பாளிகளை இனங்காட்டுவதோடு காலத்தால் அழியாத படைப்புக்களாகவும் நிலை பெறுகின்றன.

கலைவழி இறைபணி என்ற தாரக மந்திரத்தை முதன்மையாகக் கொண்டு கலைத் தொண்டாற்றி வரும் திருமறைக்கலாமன்றம் பிரான்ஸ் சமீப காலமாக நூல் வெளியீடுகளையும் நிகழ்த்தி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில் அண்மையில் திருமதி நவஜோதி யோகரட்ணம் அவர்களின் *எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்* எனும் கவிதை நூல் வெளியீட்டை செய்திருந்தது. அந்நூல் வெளியீட்டு விழாவுக்கு இலக்கிய ஆர்வலர்கள், விமர்சகர்கள், கருத்துரையாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட அமைப்புக்களின் நிர்வாகிகள் எனப்பலர் வருகை தந்திருந்தனர்.

முன்னாள் பாடசாலை அதிபர் திரு. இசிதோர் பெர்னாண்டோ அவர்கள் வெளியீட்டு விழாவின் தலைமைப் பொறுப்பை ஏற்று அழகாகவும், நேர்த்தியாகவும் குறிப்பாக நிதானமாகவும் நிகழ்வை திறம்பட நடாத்தியமைக்கு அவருக்கு எமது பாராட்டுக்கள்.

ஆய்வுரை நிகழ்த்திய திருமதி நவா ஜோதி அவர்கள் கவிதை வரும் வரை காத்திருக்க வேண்டும் என்றும், கவிதைகளோ மற்றும் எந்தப் படைப்பாக இருந்தாலும் அது உற்பத்தியாக இருக்கக்கூடாது. ஒரு பிரசவமாக இருக்கவேண்டும் என்று தனது பார்வையில் கவிதைகளை அழகாக ஆய்வுசெய்தார். படைப்பாளியின் மனம் நோகாத விதத்திலும் அதே நேரத்தில் இனிவரும் படைப்புகளுக்கு வலுச் சேர்க்கும் விதமாகவும் ஆரோக்கியமான முறையில் குறைகளைச் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு பிரசவம் தான். வலிகளோடு, முனகலோடு பிளக்கின்ற படைப்புக்கள் வலுவான ஆக்கங்களாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய லக்ஸ்மி அவர்கள் பெண் கவிஞர்கள் தங்களின் பொறுப்புணர்ந்து கவிதைகளை தரவேண்டும் என்றும், ஆணாதிக்க மையத்துக்குள் வீழ்ந்து கிடக்கின்ற பெண்களை நிமிர்த்தும் ஒரு ஆயுதமாக கவிதைகள் பீறிட்டுப் பாயவேண்டும் என்றம், இன்றைய சூழலில் எழுதிக்கொண்டிருக்கும் குட்டி ரேவதி, சல்மா, அனுபாமா, மாலதி மைத்திரி, லீனா மணிமேகலை, சுகிர்தராணி போன்றோரின் கவிதைகளில் இருக்கின்ற வீச்சு நவஜோதியின் கவிதைகளில் குறைவாக இருப்பதாகவும் இனிவருகின்ற படைப்புக்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன் ரூசிய பெண் கவிஞர் அன்னா அக்மதேவாவின் பல கவிதைகளை உதாரணத்துக்கு எடுத்துக்காட்டினார். தனது கருத்துரையை முடிக்கும்போது நவஜோதியின் பெயருக்குப் பின்னால் இருக்கும் அவரது கணவனின் பெயர் எந்த வகையில் இந்நூலுக்கு உரிமை கொண்டாடுகிறது அல்லது படைப்புக்களில் பங்கெடுத்திருக்கிறது என்ற கேள்வியை தொடுத்து சபையோரை சிந்திக்கத் தூண்டிவிட்டு அமர்ந்தார்.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய வண்ணைதெய்வம், நவஜோதியின் தந்தை ஈழத்து எழுத்தாளர் வரிசையில் முக்கியமானவராக கருதப்படுபவர் என்றும், அவருக்கும் தனக்குமாக இருந்த உறவுகள் பற்றியும் கூறி அமர்ந்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய மா.கி.கிறிஸ்ரியன் அவர்களும் புதுக்கவிதை பற்றிய பல விடயங்களைக் குறிப்பிட்டு தனது உரையை நிறைவுசெய்தார்.

இறுதியாக ஏற்புரை நிகழ்த்திய நவஜோதி அவர்க்ள தனது தந்தை அகஸ்தியர் ஐயா அவர்கள் பற்றியும் அவரது படைப்புக்கள் பற்றியும் அதிகமாகப் பேசினார். அத்தோடு அறிமுக விழாவை ஏற்பாடு செய்திருந்த திருமறைக்கலாமன்றத்துக்கும் நன்றியைத் தெரிவித்து தனது ஏற்புரையை நிறைவு செய்தார். புதிய படைப்பாளியான நவஜோதி அவர்கள் தனது தந்தையின் புகழில் சார்ந்திருப்பதை விடுத்து தன்னுடைய படைப்புக்களின் மூலம் தனது தந்தைக்கு புகழ்சேர்க்க வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

ஏற்புரைக்கு முன்னதாக சபையோரின் கருத்துரைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று ஆவலாக காத்திருந்த இளம் படைப்பாளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காதது ஏமாற்றமாக இருந்தது. பல வெளியீடுகளில் தாங்களாக முன்வந்து கருத்துரைகள் வழங்க மாட்டார்களா? என்று எதிர்பார்க்கின்ற இன்றைய சூழலில் சில இளம் படைப்பாளிகள் கருத்துரை வழங்க அனுமதிகேட்டும் நேரத்தை குறிப்பிட்டு அனுமதி வழங்க மறுக்கப்பட்டது மனவருத்தத்துக்குரிய செயலாகவே பட்டது. இனிவரும் முயற்சிகளில் வெளியீட்டாளர்கள் இதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

திருமறைக்கலாமன்றம் இன்னும் பல நூல் வெளியீடுகளைச் சிறப்பான முறையில் செய்து கலைத்தொண்டாற்ற வேண்டும் என்று எனது வாழ்த்துக்களோடு பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

- எ.ஜோய் **- 15.03.2006**

இவ்வருடம் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தமது பாதுகாவலரான புனித பத்திரிசியாரின் தினத்தை முன்னிட்டு கலைநிலா-2006 என்ற நிகழ்வினை கடந்த 09.04.2006ல் போட் ஒபவில்லியர்சில் உள்ள நகரசபை மண்டபத்தில் நடாத்தியிருந்தனர். பத்திரிசிய பழையமாணவர்களும், அவர்தம் குடும்பத்தினரும், நண்பர்களும், அழைப்பாளர்களும், ஏனைய பழைய மாணவர் சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்ட இவ்நிகழ்வில் இசைநிகழ்ச்சியும், பல நடனநிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. யுத் இளைநிலா குழுவினரின் இசைநிகழ்ச்சி மிக ஒழுங்காக வடிவமைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இவ் இளம் இசைக்குழுவினரின் திறமைகளை அங்கு சபையில் வீற்றிருந்த பலர் வியந்து பாராட்டினர். சிறப்பு நிகழ்ச்சியாக பத்திரிசிய பழைய மாணவர்களான திரு.பிரான்சிஸ் சேவியர் அவர்களும், திரு.எ.ரி.எ.செல்வராஜா அவர்களும் பத்திரிசியார் கல்லூரிக்கும் சங்கத்திற்கும் ஆற்றிய பணிகளுக்காகவும், விசேடமாக செல்வராஜா அவர்கள் கலைத்துறை விளையாட்டுத்துறை ஆகியவைகளுக்கு ஆற்றிய பணிகளுக்காகவும் சங்கத் தலைவர் திரு.எ.எவ்.ஜெறாட் அவர்களால் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

## எதிர்பாரா நிகழ்வுகள்!

வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்வுகளைச் சந்திக்காதவர்கள் இருந்திருக்க முடியாது! எனது எதிர்பாரா அனுபவ நிகழ்வுகள் ஓராயிரம்! இவ்வயோதிப வேளையில், இரைமீட்டுப் பார்க்கும்போது , மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை! யாருக்குச் சொல்லியழ அல்லது மகிழ?!

தாயகத்திலே,1985 வரை மருத்துவப் பிரவேசம், துரதிஸ்டவசமாக கிட்டியதேயில்லை! 1985-1993 வரை தமிழகத்திலும், அகதி வாழ்க்கையிலும் சரி, சந்தர்ப்பமே கிட்டியதில்லை.! 1993ல் என்னை என் குடும்பத்தினர்,பிரான்சுக்கு இறக்குமதி செய்துவிட்டார்கள்! அன்று தொட்டதுதான், மருத்துவமனைப் பிரவேச வரலாறுகள்!

ஆண்டு 1995 மார்கழி 5ம்திகதி, குடும்ப வைத்தியர்கள், கோணேஸ் மருத்துவ மனைக்கு சிபாரிசு செய்துவிட்டார்கள். இலகுவான மருத்துவமனைப் பிரவேசம். வரவேற்புபசாரங்கள், பரிசோதனைகள்! அடிவயிற்றிலே ஏதோ பாரிய சிக்கல். மார்கழி 8 சத்திரசிகிச்சை. முதன்முறையான அனுபவம். என்ன நடக்கும் ஏது நடக்கும் என்ற அங்கலாய்ப்பு. அனுபவங்கள் புதுமை! சத்திரசிகிச்சைக் கூடப் பிரவேசம், அந்தளவும் தான்.

27 நாட்களின் பின்தான் சாடையான மயக்கத் தெளிவு! இடமோ புது இடம். என்னைச் சுற்றி, பலவித மருத்துவ அணிகலங்கள், கையசைத்தால் ஒன்று கதறும், காலசைத்தால் ஒன்று கத்தும், தலையசைத்தால் ஒன்று தந்தனத்தோம் பாடும், மருத்துவ மாதர்கள் சுற்றிவர படையெடுப்பர். மருத்துவர்களும் சுற்றுலா வருவர்! எல்லாம் எனக்கு சிதம்பர சக்கரம்! மொழிப் பிரச்சினை! ஏதும் அறிந்து கொள்ள முடியாத நிலை!

ஒரு நாளைக்கு 2 மணித்தியாலம் தான் பார்வையாளர் நேரம். பார்க்க வருபவர்கள் சந்திரமண்டலத்திற்குப் பயணம்செய்பவர்கள் போல் முகமூடி தரித்துத்தான் அனுமதிக்கப்படுவர். அப்படி வருபவர்களில், மனைவியார், மக்கள் யார் என்பது அடையாளம் காண்பது மிகவும் கடினம். தனிமை, அது ஒரு உளவியல் தாக்கம். அடிக்கொரு தடவை மருத்துவமாதுகள் வந்து செல்லாவிடில், அது ஒரு ஏக்கம். பிறவிப்பயன் என மனதை தேற்றிக்கொள்ள வேண்டியது தான்.

நாட்கள் செல்லச் செல்லத்தான் நான் விருந்தாளியாக இருப்பது கோணேஸ் மருத்துவ மனையல்ல, Val d'Grace ல் உள்ள இராணுவ மருத்துவ மனை என்பது. எனக்கு ஒரே சிதம்பர சக்கரம். அன்றைய தினம் என்னைப் பார்ப்பதற்கு, இன்னொருவரின் கைத்தாங்கலில் ஓர் நண்பர் என் அறையினுள் பிரவேசித்தார். அடையாளம் தெரிந்து கொண்டேன். அழுதழுது என்னிடம் கேட்டார் *மச்சான் முகத்தான், நீ என்னை விட்டுப் போயிடுவியாடா?* என்று. நான் சிரித்தபடி கூறினேன் *நான் போறதெண்டால், உன்னையும் கொண்டுதான் போவேன்* என்று. அந்த நண்பர் வேறு யாருமல்ல, என் சமகால கலையுலக நண்பன், அப்புக்குட்டி ராஜகோபால்!.

மூன்று மாத மருத்துவமனை சிறைவாசம்! நாளை விடுதலையென உறுதி செய்யப்பட்டும் விட்டது. இராணுவ மருத்துவமனை உயர் மருத்துவ அதிகாரி, புன்னகையுடன் வந்தார். ஆங்கிலத்திலே, இக்கொடிய நோயிலிருந்து உம்மைத் தப்ப வைத்தது எமக்கொரு அரிய சாதனை, அது மட்டுமல்ல பிறிதொரு நாட்டு இராணுவ அதிகாரியைக் காப்பாற்றியது எமக்கொரு பெருமையும் கூட என்றார். அதிர்ச்சியுடன் சிரிப்பும் கலந்து நான் கூறினேன், நான் இராணுவத்தினனல்ல என்று கூறி முடிப்பதற்கு முன் அவர் கூறினார், மறைக்க வேண்டாம் உமது கொடுவா மீசையே காட்டிக் கொடுக்கின்றது என்றார்.

எனக்கெல்லாம் ஒரே மர்மம்! வீடு திரும்பியதும்□இராணுவ□ ஆராட்சியில் இறங்கினேன். அப்போது தான் துப்புத் துலங்கியது! என்னை கோணேஸ் மருத்துவ மனையில் சேர்ப்பதற்கு கூட்டிச் சென்ற புத்தி ஜீவிகள் என் தொழில் கலைத்துறை என்பதை ஆங்கிலத்தில் Literary man என்ற கூறிவிட, மருத்துவ மனைப் பதிவாளர் 'Military man" என்று பதிந்திருந்ததினால், சத்திரசிகிச்சை சிக்கலாகிவிட இராணுவ மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்துவிட்டனர். நான் வீடு திரும்பும்வரை அந்த உயர்நிலை அதிகாரி என்னை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டதெல்லாம் நீங்கள் இராணுவத்தில் எந்த நிலை அதிகாரியாக இருந்தீர்கள் என்பது தான். எனக்குமே பதில் என்னவென்று தெரியாமலே வீடு திரும்பினேன்.

இதை அதிஸ்டம் என்பதா, என்னென்பது? புதுமையான அனுபவங்கள்! இப்படி ஏராளம்,

-முகத்தார் ஜேசுரட்ணம்-

## முன்னோடி

பிரான்சில் புதிய இளம் தலைமுறைக் கலைஞர்களின் முயற்சியாக **முன்னோடி** என்ற முழு நீள திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகின்றது!

இதன் படப்பிடிப்புகள் 5மாதககாலமாக உட்புற, வெளிப்புற படப்பிடிப்புகளாக நடைபெற்று வருகின்றது. புலம்பெயர்ந்து வாழுகின்ற ஒவ்வொரு இளைஞனின் வாழ்க்கைக்கும் நம்பிக்கை ஊட்டுவதாக இத் திரைக்கதை அமைந்துள்ளது. இப்படத்தில் திருமதி உமா சந்திரமோகன், செல்விகள் நிரோனி சந்திரமோகன், மெடோனி சந்திரமோகன், ஜெயா, மனோஜ், ஜங்கரன், ஜெறாட், பவன், செல்வி அஞ்சலி நந்தகுமார் ஆகிய கலைஞர்கள் பங்குகொள்கின்றனர். படத்தின் இசையை பாரீஸ் சுப்பர் ரூபேர்ஸ் ஞானா அவர்கள் அமைக்க ஒளிப்பதிவை கல்முனை குகன் மேற்கொள்கின்றார். திரு தங்கராசா சுதர்சன் அவர்கள் இப்படத்திற்கான கதை, திரைக்கதை, பாடல்கள் ஆகியவற்றை எழுதி இயக்கியுமுள்ளார்.

சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் இன்னும் சில மாதங்களில் வெளிவரவிருக்கும் இத்திரைப்படம் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

### ஆசை கொண்டே . .

சின்ன தாய்
சின்ன சின்ன தாய் விடியலில்.
விடிகின்ற பொழுதே
இரைச்சலில்.

இயந்திரங்களின் இரைச்சலுள்
ஓடுகின்றான்
ஓடுகின்ற பொழு தெல்லாம்
ஓய்வின்றி

ஓயலற்ற, அலையாய் அசைய
வந்து,
அசைந்து-வந்து வந்தே
தின்கின்றது.

தின்று தின்றே போகின்ற
நினைவு மட்டும்
நினை வலையாய் வந்து ஒருகணம்
நின்று நிறுத்தி

க். . கணம். . நிறுத்தி
மருந்திடுகின்றாள்
ஊசியதான வலியில்லை
மருந்து மாத்திரை போட்டுப் போக

ல் . . .லை
நிற்கின்றான்.

நின்று கண்ட இடமெல்லாம்
நினைவில்.
நினைவலையாய் நிறுத்தி
எ. . .ன. . .னும்
நிறுத்திப் பார்க்கின்றான்

முடிந்த தென்று போக
முடியலையே? முடிவொன்றாய்
மாறு பாடற்றவன்
மார்பு பட்டதே

மாறு படாது முடியுமாய்
மனது . . . .
இறந்து . . . .
மாண்ட வேளையில்
வாழ்கின்றான்.

மண்ணுக்குள்ளாய் வாழ்வென்று
மண்ணுக்குள் வாழ்கின்றான்

புரியலையே!!!!!

-நவீன்-

## நோர்வேயிலிருந்து பாரிஸ் நோக்கி ஓர் விமானப் பயணம்

பனிமூட்டம் நிறைந்த விமான நிலையத்தில்
காலைப் பயணத்துக்கான வரிசையில்
காத்திருந்து கடவுச்சீட்டுக்களை சரிபார்த்தபின்
காட்டப்பட்ட விமானத்தை நோக்கி நகர்ந்தோம்

விமானத்தின் மேல்பகுதி பனியால்மூடி
போர்வையாய் போர்த்திருந்தது
எமக்கான நேரம் வந்ததும் விமானத்துள் புகுந்து
எமதாசனங்களைத் தேடிப்பிடித்தோம்

குறிப்பிட்ட நேரத்தில் விமானம்
ஓடு பாதையில் ஓடித் தரித்து நின்றது
எதுவும் புரியாத நிலையில் பார்வையை
கண்ணாடி வழியாக திருப்பிய போது

காணும் இடமெங்கும் பனிமூட்டம்
ஸ். ஸ். .என்ற இரைச்சலுடன் புகைமூட்டம்
விமானத்தின் மேல்பகுதியில் கடகட சத்தம்
பக்கவாட்டில் தண்ணீராய் ஓடியது.

விமானம் கழுவப்படுகின்றதை உணர்ந்தேன்
பனிக்கட்டிகள் விமானப்பறப்பிற்கு
தடையாகும் என்பதனால் கழுவுகிறார்கள்
மீண்டும் விமானம் ஓடுபாதையில்

வெண்முகில் கூட்டங்கள் விரவிக்கிடக்க
விர் என விமானம் பறந்தது அதற்கு மேலே
கீழே பார்த்தால் பஞ்சைப்போன்று பரவிக்கிடக்குதே
படைபடையான பனிமுகில் கூட்டம்

சூரியன் கிழக்கே சுடர்விட்டு தோணுது
சுகமாய் ஒளியை சுரந்த வண்ணம்
விண்ணில் மிதந்து விரைவாய் பறக்குது
விமானம் எங்களைச் சுமந்த வண்ணம்

அலை அலையாக அமைதியாய் கிடக்குது
அழகழகான பனிமுகில் கூட்டம்
கண்களுக்கெட்டா கடல்வெளிபோல்
கவ்விக்கிடக்குது கவித்துவமான பனிமுகில்கூட்டம்

கண்களில் தூக்கம் கடுகியே வந்து
மடல்களை மூட மனத்தை தூண்டி
மறுகிய மனசு மனத்திரைபோல
மறுதலித்து மனத்தை தட்டமீண்டும்

உப்பாய் விளைந்து உறைந்து கிடக்குது
உயர்மலை எங்கும் உறைபனிக்கூட்டம்
பள்ளத்தாக்கெல்லாம் பசுமையாய் தெரியுது
பசியைத் தீர்க்கும் பயிர்வளம் எங்கும்
பஞ்சுக் குவியலாய் பரவிக் கிடக்குது
பார்ப்பவர் கண்ணுக்கு பளிங்காய் தெரியுது
வெண்மைக்கு நிகராய் வேறென்ன வேண்டும்
விளைந்து கிடக்குது வெண்முகில் கூட்டம்

தாளப்பறந்த விமானத்திலிருந்து
தரையை நோக்கி பார்த்தபோது
அழகழகான அடுக்கு மாடிகள்
அடுத்தடுத்து அமைதியாய் கிடக்குது

காணக்கான கண்கொள்ளா காட்சிகள்
கடந்து போகுது எமது விமானம்
காற்றினில் அசைந்து கடந்து(நகர்ந்து) போகுது
கணவேகத்தில் முகில்கள் கூட்டம்

பார்க்காத காட்சிகள் பலதைக் கண்டேன்
பகல் உணவாக அதனை உண்டேன்
பறக்கும் நேரம் முழுவதும் உண்டு
பசியை மறந்து ரசித்து நின்றேன்

தரையிறங்கிய எமது விமானம்
தரிப்பிடம் நோக்கி தளர்ந்து சென்றது
கதவுகள் திறக்க வாசல் வழியே
விமானத்தை விட்டு வெளியெ வந்தோம்

பரபரப்பான விமானத்தளம்
பாரீஸ் நகரத்தின் ஒதுக்குப் புறம்
பயணிகள் போவதும் வருவதும் மனதில்
பசுமையாய் பகிர்ந்த காட்சிகள் என்ன. .என்ன.

-சுஜி சகோதரிகள் (பாரீஸ்)-

# சுயதேடலும் கருத்தியல் புனைவுகளும் - ஜோ.ஜெஸ்ரின்

'தேடுபவன் கண்டடைவான்" என்ற கூற்றிற்கிணங்க 'சுயதேடல்" மிகவும் பொருத்தமான தலைப்புமட்டுமல்ல மனிதர்கள் பின்பற்ற வேண்டிய கடப்பாடு அணுகுமுறையுமாகும். முன்னேற வேண்டும் என்ற உந்துதல் எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கின்றது. இதில் நாடு, மொழி, இனம் ஆகிய எந்தப் பேதமும் கிடையாது. ஒவ்வொரு மனிதர்களும் தாங்கள் வாழுகின்ற சூழ்நிலைகளை அனுசரித்து வாழ்க்கையில் சுயதேடலில் முன்னேறிச் செல்லவே விரும்புகின்றார்கள்.

> தோல்விகளையும், இழப்பீடுகளையும் கண்டு துவண்டு போகாதவர்கள்தான் சாதனையாளர்களாகக் காணப்படுகின்றனர்.

சுயதேடல் அல்லது வாழ்க்கை முன்னேற்றம் என்பது என்ன? இந்த வினாவின் பின்னணியில் சுய முன்னேற்றத்திற்கான அர்த்தப் பொருளை கண்டுகொள்ள முயலுவோம். வாழ்க்கையை மகிழ்ச்சியுடனும், வசதியுடனும் வாழ்வதற்கு ஒவ்வொருவரும் விரும்புவர். ஏழ்மையாகி இருப்பது ஒரு குற்றம் என்கிறார் ஜார்ஜ் பெர்னாட். எனவே ஒருவன் பணவசதிகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் முன்னேறுவது முடியாத விடயம். தனது திறமையை முழுமையாக வெளிப்படுத்துவதற்குக் கூட பணம் தேவையாக இருக்கிறது. பணம் சம்பாதிக்கும் வழியைக் கண்டுகொள்ளாதவர்கள் தான் ஏழைகளாக இருக்கின்றனர். மற்றவர்கள் எதையாவதுசெய்து தரமாட்டார்களா என்று காத்திருப்பதை விட சுயமாகத் தேடுவதன் மூலம் சுகமாகி வாழலாம். கடுமையாக உழைப்பதிலும், வசதிகளை அமைத்துக்கொள்வதிலும் தான் வெற்றி தங்கியுள்ளது. குறிப்பாக இருளில் ஒன்றைத் தேடுவதைக் காட்டிலும் விளக்கை வைத்துத் தேடும்போது உழைப்பை, நேரத்தை விரயமாக்காமல் எமது தேடலை ஆழப்படுத்திக்கொள்ள முடியும்.

தோல்விகளையும், இழப்பீடுகளையும் கண்டு துவண்டு போகாதவர்கள் தான் சாதனையாளர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் எண்ணிக்கையில் குறைவுதான். ஆனால் வாய்ப்புக்களைத் தவறவிட்டு சோம்பேறித்தனமான கனவுகளுடன் சாதாரண மனிதர்களாக வாழ்வதை விடுத்து தாங்கள் சார்ந்த துறைகளில் முன்னேற்றமடைய விரும்ப வேண்டும் என பலர் விரும்புகின்றார்கள். தங்கள் வாழ்க்கை வட்டத்தில் காணப்படுகின்ற கடமைப்பாடுகளில் சுய முன்னேற்றம் அடைவதற்கு கடவுளின் சக்தியான நம்பிக்கை அவசியம். முன்னேற முடியாமல் தவிப்பவர்கள் யார்? பொதுவாக தோல்விகள், மனித மனங்களை இலகுவாகப் பாதிக்கின்றது. மனஉறுதியில்லாதவன் எளிதில் சோர்ந்து போகின்றான். வெற்றி உற்சாகமூட்டும். தோல்வி துவழச்செய்யும். தோல்விகளை சாதாரணமாக கருதுபவன் என்றும் வெற்றியடைகின்றான்.

சுயதேடல், எமக்குள் ஓர் உன்னதமான பார்வையைச் செலுத்தி புறச்சூழலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நான்கு படிமுறைகள் அழுத்தம் பெறுகின்றன.

1.சுய அலசல்
2.சுய வளர்ச்சிக்கு திட்டமிடுவது எப்படி?
3.சுயமாக எதிர்ப்புக்களைச் சந்திப்பது எவ்வாறு?
4.மேற்குறிப்பிட்ட படிமுறைகளால் வெற்றி.

> மனஉறுதியில்லாதவன் எளிதில் சோர்ந்து போகின்றான். வெற்றி உற்சாகமூட்டும், தோல்வி துவழச் செய்யும். தோல்விகளை சாதாரணமாக கருதுபவன் என்றும்வெற்றியடைகின்றான்.

**சுய அலசல்:**

மனிதன் தன்னைத் தானே சிந்தனை செய்வதன் மூலம் தனது நிலையை மேம்படுத்த வேண்டும். மனிதன் பலவீனன். ஆனால் மனதிலுள்ள பலவீனத் தன்மைகளை அகற்றுகின்ற போது சுயமுன்னேற்றம் பலன் தருகின்றது. எம்மைத் தவிர மற்றவர்கள் எம்மை மதிப்பீடு செய்ய முடியாது. எனவே நான் எனது குறை நிறைகளை ஆராய முற்படவேண்டும். என்னையே நான் கேள்வி கேட்க வேண்டும். தீர்வையும் நான் தான் எடுக்கவேண்டும். வறுமையும் செல்வமும், அறிவும் அறியாமையும், பலமும் பலவீனமும், நோயும் ஆரோக்கியமும், மனத்திண்மையும், மனத் தளர்ச்சியும் போன்ற சாதக, பாதக விளைவுகளைச் சந்திப்பவனே மனிதன். சுயதேடல் மூலம் எம்மைப் பற்றிய அரைகுறை அறிவைப் போக்க முடியும். திறமைகள், ஆற்றல்கள், சக்திகள் புதைந்து அபாரமான சக்தி எம்முள் மறைந்து கிடக்கின்றது. இதனைக் கண்டு பிடிக்க நான் முதலில் என்னையே நண்பனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னையே நான் மதிக்க வேண்டும். எனக்கே நான் உதவவேண்டும். இவ்வாறு செயல்படுபவன் சிறந்து விளங்குவான்.

## சுய வளர்ச்சிக்குத் திட்டமிடுவது எப்படி?

மாபெரும் சக்தி ஒன்று உண்டு. அதாவது "எதிர் காலத்தைப்பற்றிய கற்பனை என்கின்ற சக்தி." ஏழைகள், பணக்காரர், நடுத்தர வருமானம் உள்ளவர் யாராக இருந்தாலும் ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். நானே எனக்கு நல்ல சிந்தனையாளனாக, அறிவுள்ள மேதையாக இருக்கவேண்டும். எனது எதிர்காலத்தைப் பற்றிய கற்பனையானது சுய வளர்ச்சிக்கு அறிந்தோ, அறியாமலோ என்னைத் திட்டமிட வைக்கின்றது. ஏனெனில் "நேற்றைய கற்பனைகள் தான் இன்றைய நிஜம்."

## சுயமாக எதிர்ப்புக்களைச் சமாளிப்பது எப்படி?

எதிர்ப்புக்கள் இல்லாவிடின் மனித ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளவும், உயர்ந்து செழிக்கவும் முடியாது. பிரச்சனைகளை அணுகுகின்றபோது அது இல்லாமல் மறைகின்றது. எதிர்ப்புக்களை எதிர்கொண்டு சமாளிப்பதே சிறந்தது. அரைகுறை மனதுடன் எதிர்கொள்வதைத் தவிர்த்து மன உறுதியுடன் வெற்றி கொள்ள வேண்டும்.

ஆகவே மனித வாழ்க்கைக்கு "தேடல்" என்பது மிகவும் அவசியமான ஒன்று. ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒன்றை அல்லது பலதை தேடிக்கொண்டுதான் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றான். இன்றைய இளைஞர், யுவதிகளிடையே தலைமைத்துவப் பண்பு நிறைந்திருக்கின்றது. மற்றவர்களை வழி நடத்துவது பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் மற்றவர்களால் வழி நடத்தப்படுகின்ற போது கீழ்ப்படியாவிடில், தீர்வு இல்லாமல், சமாதானமில்லாமல் மற்றவர்களிற்கு கீழ்ப்படியவோ, தீர்வு சொல்லவோ, சமாதானம் வழங்கவோ முடியாது என்பதை மனங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அனுபவம் என்று அழைக்கப்படுகின்ற அடித் தளம் எம்மை நாம் மீள் பார்வை செய்ய உதவுகின்றது. தற்காலத்து கருத்தியல் புனைவுகளைத் தாங்கி வரும் சாதக, பாதக மான படைப் புக்கள் வாசகனை மட்டுமல்ல படைப்பாளியையும் பாதிக்க வல்லனவாகும்.

> எம்மைத் தவிர மற்றவர்கள் எம்மை மதிப்பீடு செய்ய முடியாது. எனவே நான் எனது குறைநிறைகளை ஆராய முற்பட வேண்டும். என்னையே நான் கேள்வி கேட்க வேண்டும். தீர்வையும் நான்தான் எடுக்க வேண்டும்.

வாழ்வில் மாற்றங்களும் முயற்சிகளும் வலுவிழக்கின்றபோது காத்திரத் தன்மையுடன் சிந்தனைகள் உரமாகிட சுய தேடல் உருவாகும். எமது வாழ்க்கையில் சுய தேடலுக்கான சூழ்நிலைகள் நிறைந்துள்ளன. எமக்குள் ஓர் உன்னதமான தேடலை ஏற்படுத்தி இருள் சூழ்ந்த நினைவுகளிற்கு ஒளி கொடுப்பதற்கு பார்வைகள் ஆழமாக்கப்படும்போது தான் அறிவும் ஆழமாக்கப்படும். அனுபவமும் அர்த்தமுள்ளதாக நன்மை பயக்கும். "தேடுவோர் கண்டடைவர்."

- நன்றி "நான்"-

## எனது வீடு. . .

ஜன்னல் கண்ணாடியை
ஊடறுத்து
உள் நுழையும்
சூரிய ஒளிபோல்
உன் நினைவுகள்
என்னுள் பரவுகிறது

யாரோ குறுக்கு மறுக்காக
அந்த அறையில்
நடந்து கொண்டிருக்கிறார்கள்

உரியவன் வந்திருக்கிறேன்
என்ற குரலுக்கு
பதில் இன்றி
கதவு மூடியே கிடக்கிறது

உள்ளே முருங்கைமரம்
பட்டுப் போயிருக்கலாம்
அல்லது
காய்த்துக் குலுங்கலாம்

கிணற்றடியில் வாளியின் ஒலி
கேட்கிறது
நான் விட்டு வந்த மீன்கள்
இன்னமும் எனக்காக
காத்திருக்கலாம்

யாராவது
கதவைத் திறவுங்கள்
அறை மாடத்தில்
கட்டப்பட்டிருந்த தூளியில்
கொஞ்சம் நான்
உறங்க வேண்டும்

என்னை
கால்களில் வளர்த்தி
எண்ணெய் தடவி
மூக்கு நிமிர்த்தி
குளிப்பாட்டிய
அம்மம்மாவின் ஆத்மா
அங்கு இன்னும்
குடிகொண்டிருக்கலாம்

தயவுசெய்து
கதவைத் திறவுங்கள்

வனவாசம் முடித்து
வீடு திரும்பிய
இந்தப் பைத்தியக்காரனிடம்
இறுதியாக எஞ்சியிருப்பது
இந்த வீடும்
கொஞ்ச நம்பிக்கையும் தான்

இருத்தல் மீது
நம்பிக்கையற்றுப் போகும் போது
யார் யாரோ சொல்லுகிறார்கள்
இந்த வீடு
எனக்குச் சொந்தமில்லை என்று !

-எ.ஜோய். 17.03.2006-03-14

# அவமானங்கள்

வேலை வெட்டி இல்லாமல்
வீதி வம்பு அளந்த என்னை
வெளி நாட்டிற்கு அனுப்பினால்
திருந்துவான் இவன் என்றார்கள்!
அவமானமாக இருந்தது - ஊரிலே
வேலை செய்யத் தெரியாதவனுக்கு
வெளிநாடுகளா புகலிடம்?
வெளிநாடுகள் எல்லாம்
தரமிறங்கிப் போய்விட்டதா?
வெளிநாடு எனக்கு
தண்டனையா? பதவி உயர்வா?

படித்த படிப்பிற்கு வேலை தேடி
பல வருடங்களாகக் காத்திருந்தேன்!
விண்ணப்பங்கள் அனுப்புவதே
வேலையாக இருந்தது
படிப்பிற்கு குறைஞ்ச வேலை செய்ய
அவமானமாக இருந்தது!

ரை கட்டி வேலை செய்யவேண்டும்
இது இலட்சியம்! இன்னொருவரிடம்
கை, கட்டி வேலை செய்வதா?
அவமானமாக இருந்தது!

இன்னாருக்கு இன்ன வேலைதான்!
இது நம் நாட்டு நீதி.
வெளிநாட்டில். வேலையில்!
எல்லோருக்கும் சமத்துவமாம்!
நம் நாட்டை நினைக்க- எனக்கு
அவமானமாக இருந்தது!

வெளிநாட்டில் என் முதல் வேலை
ரை, யை கழட்டி குப்பையில் போட்டதே!
றெஸ்ற்ரோறன் ஒன்றில்
கோப்பை கழுவும் வேலையாம்
வேலையில் சேர- எனக்கு
அவமானமாக இருந்தது!

கோப்பை கழுவும் வேலைக்கும்
பாட்டி அதிகமாக இருந்தது!
படிப்பிற்கு வேலை எல்லாம்
எடுக்கமுடியாதாம்!

வெளிநாட்டில் -வேலை
தேடுவது! செய்வது! எல்லாம்
படிப்பாகவும் இருந்தது!
படிப்பினையாகவும் இருந்தது!
வேலை இல்லாமல் இருக்கவே
அவமானமாக இருந்தது!

சமத்துவம் இங்கு
வேலையில் தெரிந்தது!
ஐயர் வீட்டுப் பையன்
இறைச்சிக் கடையில் வேலை!
சுருட்டுத் தொழிலாளி
கோவில்ப் பூசாரி!
படிப்பிற்கு வேலை இல்லை
வேலையே படிப்பினை!
வேலை இல்லாமல் இருக்க
அவமானமாக இருந்தது!

தூக்கத்தில் கனவு கண்டேன்
திமிங்கலம் ஒன்று சொன்னது-தான்
அவமானப்பட்டு விட்டதாம்!
எப்படி என்று கேட்டேன்?
ஒருவன் தன்னைப் பிடிக்க
தூண்டில் போடுகின்றானாம்!
தனக்கு அவமானமாக இருக்கின்றதாம்!

நட்சத்திரம் ஒன்று நகைத்தது!
தான் அவமானப்பட்டு விட்டதாம்!
எப்படி என்று கேட்டேன்?
மின், மினியைப் பற்றி ஒருவன்
மேகத்தில் கவிதை எழுதுகின்றானாம்!
தனக்கு அவமானமாக இருக்கின்றதாம்!

தூக்கம் கலைந்தது!
கனவும் கலைந்தது!
கனவினில் வந்த அவமானங்கள்
நியாயமானதாக இருந்தது!
இப்பொழுது எனக்கு நானே
அவமானமாக இருந்தேன்!

விடிந்ததும் விடியாததுமாய்
ஓடினேன் றெஸ்ற்ரோறன்ருக்கு
கோப்பை கழுவும் வேலையில்
சேர்ந்துவிட வேண்டும்.
வேலை கிடைக்காவிட்டால்
எனக்கு அவமானம்

-வண்ணை தெய்வம்-

## பனிக்கால இரவுகளும் பாவையும்

முற்றத்துப் பனியை
அள்ளிச் செதுக்கிய
சிற்பப் பெண்
நிலவில் பால்குடித்து
வளர்ந்தவள் போலிருந்தாள்.

அவளைச் செதுக்கிய
ஒவ்வொரு கணத்திலும்
என் விரலின் நுனியில்
உயிர் குவிந்துகிடந்தது.

இரவு முழுவதும் அவள்
என்னோடு இருந்தாள்.
நிலவொளியில் அவள் நிழல்
என் நெஞ்சுக்குள் விழ

அவளை அணைத்துக்கொண்டு
உறங்கினேன்.

மறுநாள் அவள் உருகிப் போனதாய்
ஊர் சொல்லிற்று.
அடுத்த இரவுகளில்
நிலவு பால் சுரக்க
அவளின் சாரம் எனக்குள்
உறைந்து கிடப்பதையும்,
எனது விரல்களில்
உயிர் குவிந்து கிடப்பதையும்
யாரறிவார்? - ஆயினும்
இனிமேல் வெண்மையும்,
மென்மையும்,
உருகிப் போகக்கூடியதுமான
பனியால்
அவளை நான் செதுக்கப் போவதில்லை
அவள் உருகிப் போன இறந்தகாலமே
அவளை
அழியாப் பொருட்களால்
ஆக்கத் தொடங்கிவிட்டது.

-மெலிஞ்சி முத்தன். 14.02.2006.

## கலைத்திறன் போட்டி -2006-

குருநகர் சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் தமது கிராமத்து மக்கள் மத்தியில் நடாத்துகின்ற கலைத்திறன் போட்டிகள் இவ்வாண்டும் கடந்த 07.05.2006ல் நடைபெற்றது. மறைந்த திரு வால்டர் குமார் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் நடாத்தப்பட்ட இவ்விழா சங்கத் தலைவர் திரு. மனவல் அன்ரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இளம் பிள்ளைகள் பலர் இப்போட்டிகளில் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். திறமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.விசேடமாக □தமிழ்மணி□ ஜெயந்தி ஜீவா(சுவிஸ்) அவர்களின் குழந்தைப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டும், நூலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. புலம்பெயர் மண்ணில் படிப்படியாக சொந்த அடையாளங்களை இழந்துவரும் தமிழ்சமுதாயத்தின் இளம் சிறார்களுக்கு எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடுகளை மறவாது மீளக்கட்டியமைக்க இதுபோன்ற இறுவெட்டுக்களும், குழந்தைப்பாடல்களும் மிகவும் இன்றிமையாததாகும். இந்த வரலாற்றுக் கடமையில் தன்னை இணைத்தக்கொண்ட திருமதி ஜெயந்தி ஜீவா அவர்களை பாராட்டுகின்றோம். இந்தப்பாடல்களுக்கு திருமறைக்கலாமன்ற இசையமைப்பாளர் இசைத்தென்றல் எம்.ஜேசுதாசன் அவர்கள் மிகநேர்த்தியாக சிறுவர்கள் நாளாந்தம் பாடி மகிழக்கூடிய சிறப்புடன் இசையமைத்துள்ளார். கேட்டு சுவைத்தவர்கள் அனைவரும் பாராட்டும் இவ்இறுவெட்டு புலம்பெயர் மண்ணில் வாழும் சிறுவர்களுக்கு மிகவும் அவசியமானதாகும். இதை வாங்க விரும்புவோர் சங்கத் தலைவரோடு தொடர்புகொள்ளவும். மேலும் அன்று சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் வெளியீடான அலைஓசை சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# இரக்கமற்ற இரவுகளை எதிர்கொள்கையில்

(மு.புஷ்பராஜன்)

ஈராக்கிலுள்ள அமெரிக்க பிரிட்டன் கூட்டுப்படைகள் ஈராக்கிய கைதிகளை எவ்வாறு சித்திரவதை செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக சில புகைப்படங்களை தொலைக்காட்சியும் பத்திரிகைகளும் வெளியிட்டதை யாரும் மறக்கமாட்டார்கள். இன்னமும் அவை போன்றவை வெளித்தெரியாத வகையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இவ்வகைச் சித்திரவதைகள் வெளித்தெரிய வரும்பொழுது இப்பொழுதுதான் மேற்கில் அவை நிகழ்வது போலவும் இது அதிர்ச்சி அளிப்பதாகவும் அதிபர்களும் இராணுவ ஆய்வாளர்களும் கூறிக்கொண்டிருப்பார்கள். அத்தோடு மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் இவை ஒரு சில தீயவர்களின் செயற்பாடுகள்தான். ஏனையோர் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்கு அமைவாகவே நடந்து கொள்கிறார்கள் எனக்கூறி பொக்கற்றுக்குள் இருக்கும் ஜெனிவா சட்ட விதிகளை எடுத்துவிடுவார்கள்.

இவர்கள் அதிர்ச்சியடைவதும் வெறுப்படைவதும் மனப்பிறழ்வு பட்ட இராணுவத்தினரின் வக்கிரங்களுக்குப் பலியாக்கப்பட்ட கைதிகளின் மன, உடல்கள் பற்றியல்ல வெளித்தெரியவந்துள்ள தமது இரகசிய நடவடிக்கைகள் பற்றியதே. இவர்களின் நாகரீக மா சமூகம், ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையாளர்கள் எனச் சூடிக்கொண்ட முடிகள் மிகக் குறைந்த ஆயுள் கொண்டவையாகவே இருப்பதை உலகம் பலமுறை நிரூபித்துள்ளது.

இவ்வதைகள் அரச இயந்திரத்தின் ஒடுக்குமுறையின் அலகு என்பவற்றோடு அதை நிகழ்த்துபவர்களின் மனங்களில் விளைந்துள்ள அதிகார மமதையின் முன்னால் அகப்பட்டவர்கள் அனைவரும் பூச்சி என்ற மனோநிலைதான். பெரிய வியாழனைத் தொடக்கமாகக் கொண்டால் இன்றுவரை முடிவின்றித் தொடர்வதும் இன்னும் தொடரப்போவதும் அதுதான். இம்மனநிலை பற்றி பிரிட்டன் நாடக ஆசிரியர் கரோல்ட் பின்ரர்;(HARALD PINTER) தனது போகிற வழிக்கு ஒன்று (ONE FOR THE ROAD) நாடகத்தில் இவ்வாறு கூறுகிறார்.

> இதைப்பற்றி என்ன நினைக்கிறாய். இது என்னுடைய சின்ன விரல். இது என்னுடைய பெரிய விரல். அத்துடன் இது என்னுடைய சின்ன விரல். உன் கண்களின் முன்னால் என் பெரிய விரலை ஆட்டுகிறேன். இவ்வாறு இதேபோல் இப்போது சின்ன விரலை ஆட்டுகிறேன். ஒரே நேரத்தில் இரண்டு விரல்களையும் ஆட்டமுடியும். இவ்வாறு நான் விரும்பும் எதையும் என்னால் செய்யமுடியும்.

ஆம் உண்மைதான் அவர்கள் விரும்பும்எதையும் அவர்களால் செய்ய முடியும்தான். இவ்வகைச் சித்திர வதைகளைச் செயற்படுத்திய ஒரு படைவீரன் இவ்வாறு கூறுகிறான்.

> நீ துப்பாக்கி வைத்துள்ளாய். நீதான் சட்டம். நீ மக்களை எந்தவிதமாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறாயோ அந்த விதமாக ஆக்கிக் கொள்ளலாம். (Hart and Minds- Paul Byrne: Daily Mirrow 01-05-2004)

இவ்வதை முகாம்களில் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களது உறவினர்கள், அவர்கள் மனநிலைகள், படும் அவஸ்தைகள் கணக்கில் எடுக்கப்படுவதேயில்லை. அதிகாரிகள் முன்னால் ஒருவன் நிர்வாணமாக்கப்படும் பொழுது அவன் மனித மகத்துவத்தை மானிட கௌரவத்தை இழந்தது உணரப்படுவதேயில்லை மாறாக அதையே கேலியாக்கி மகிழ்ந்து கொள்கிறார்கள். ஈராக்கின் அபுகிறேப் (ABU GHRAIB) சிறையில் நிர்வாணமாக நிறுத்தப்பட்டுள்ள கைதிகளின் ஆணுறுப்புக்களைச் சுட்டிக்காட்டியபடி நிற்கும் அமெரிக்க பெண் இராணுவத்தினளை நினைவுபடுத்துங்கள். அது வெற்றி கொள்ளப்பட்ட பரிசுப்பொருளைச் சுட்டிக்காட்டுவது போலல்லவா இருந்தது. எத்தனை தாய்மார்கள் தங்களின் மகன், மகள், கணவன், உறவினர் என்ற புகைப்படங்களுடன் தடுப்பு முகாம்களின் முன்னால் அலைகிறார்கள். பழியாய் காத்துக்கிடக்கிறார்கள். பதினேழு மாதங்கள் லெனின்கிராட் சிறை முன்னால் தன் மகனுக்காக அன்னா அக்மத்தோவா அலைந்து கொண்டிருந்தாளே.

> மகன் கம்பிகளிடையே
> கணவன் புதைகுழியுள்
> மன்றாடு மன்றாடு

என அவளால் பாடவாவது முடிந்தது. உணர்வுகளை வெளிக்காட்ட முடியாது மனதுள் குமுறும் தாய்மார்கள் எத்தனை எத்தனை.

> "நீ யாரைத் தேடுகிறாய்"
> "ஒருவரையும் இல்லை. கடந்த மூன்று வருடங்களாக என் கணவரைத் தேடிக்கொண்டிருந்தேன். இப்போது அவர் சமாதானத்தில் இளைப்பாறுகிறார் என அறிகிறேன்."
> "பிறகு ஏன் வந்தாய். . .,"
> "சிநேகிதிக்கு உதவ;" இன்னொரு பெண்ணை சுட்டிக்காட்டினாள். (OF LOVE AND SHADOWS: ISABEL ALLENDA)

இவ்வகைத் துயரங்களின் வலி உணரப்படவேண்டும். விசாரணைகள், விசாரணைக் குழுக்கள் இவைகளுக்கு அப்பால் இந்த வலியின் உணர்தல் முக்கியமானதே. விசாரணைக் குழுக்களின் நியமனங்கள் செயற்பாடுகள் அந்த நேரத்தின் பதட்டமான சூழ்நிலையைத் தணிக்கவும் அரசியல் ஆதாயத்துக்கும் உதவுமே தவிர பிரச்சனையின் வேரைத் தொடப் போவதில்லை.

ஆழும் ஆசையும், அதிகார மமதையும் உயிர்களைத் துச்சமாக மதிக்கும் போக்கும் தொடர்கையில் அமெரிக்கா அன்று வியட்நாம் இன்று ஆப்கனிஸ்தான், ஈராக் மீதும், இஸ்ரவேல் பலஸ்தீனத்தின் மீதும், பிரான்ஸ் அல்ஜீரியா மீதும் ரூசியா ஆப்கனிஸ்தான் பின் செர்ச்சினியா மீதும், இந்தியா காஸ்மீரிலும், இலங்கை இராணுவம் பின் இந்திய இராணுவம் தமிழீழப் பகுதிகளிலும், இன்னும் இன்னும் அநேக அரச இராணுவங்கள் தங்கள் தங்கள் கிளர்ச்சிக்காரர் பகுதிக்குள்ளும் பதிலுக்கு புரட்சிகர இயக்கங்களும் தங்கள் கைதிகள் மீதும் என இவை நீண்டு கொண்டு செல்கையில் நலிந்தோர் மனங்களின் துயரங்களும் அவலங்களும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.